மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 18 நூற்பாலைகளும் நெசவாளர்களுக்காக உருவாக்கப்பட்ட நூற்பாலைகள்தான். இந்த 18 நூற்பாலைகளும் இன்றைக்கு 132 கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்குகின்றன என்று நான் தெரிவித்தேன். திருச்சி மாவட்டத்திலே இருக்கிற நூற்பாலை மட்டும் 6 கோடியே 70 லட்சத்து 28 ஆயிரம் ரூபாய் நஷ்டத்திலே இன்றைக்கு இயங்கிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, புதிய நூற்பாலை உருவாக்க வேண்டும் என்றால், இருக்கிற நூற்பாலைகளைச் சரி செய்தால்தான், அதனுடைய நஷ்டத்தைப் போக்கி லாபத்திலே கொண்டுவந்தால்தான், புதிய நூற்பாலையை உருவாக்க முடியும். அப்படி நஷ்டம் இல்லாமல், லாபத்திலே அதை இயக்கக்கூடிய காலம் வருமானால், அப்போது தாத்தையங்கார்பேட்டையில் நூற்பாலை உருவாக்குவதைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 333, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.

333—

பத்திரிகை விளம்பரச் செலவு

*40045—**திரு சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்திரிகை விளம்பரத்திற்கு என 1993-ல் தமிழக அரசு எவ்வளவு செலவிட்டுள்ளது?

(ஆ) செலவைக் குறைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1993-94 ஆம் ஆண்டில் செய்தி மக்கள் தொடர்புத் துறை செய்தி விளம்பரச் செலவு ரூ. 123.36 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) அரசின் பல்வேறு நலத் திட்டங்கள், சாதனைகள், விழாக்கள் பற்றி மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. எந்த அரசிலும் இல்லாத வகையில் நலத் திட்டங்களும், அரசு விழாக்களும் நடத்தி செயல்படும் அரசாக

1995 ஏப்ரல் 18]

மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு விளங்கி வருவதால் (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் திட்டங்களின் நோக்கமும் பயனும் மக்களைப் போய்ச் சேர வேண்டும் என்ற அடிப்படையில், விளம்பரங்கள் இன்றியமையாத ஒன்றாகும்; அந்த அடிப்படையிலே மக்கள் தொடர்பு சாதனமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. விளம்பரச் செலவை அரசு கட்டுப்படுத்தி வருகிறது.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பரத்தாலே வாழ்ந்தவன் வாழ்க்கை நிரந்தரமாகாது என்று பாடுவார் கவியரசு கண்ணதாசன் அவர்கள். தனியொருவனுக்கு உணவு இல்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம் என்று பாடினான் பாரதி. பலகோடி மக்கள் இங்கே வயிற்றுப் பசியோடு துடித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நாம் விளம்பரத்திற்காக இவ்வளவு செலவு செய்ய வேண்டுமா என்பதை அரசு மீண்டும் ஒரு கணம் பரிசீலிக்க வேண்டும். இப்போது அமைச்சர் அவர்கள் வெறும் செயதி மற்றும் விளம்பரத்திற்கு மட்டும் 123.36 இலட்சங்கள் செலவிடப்பட்டதாகக் கூறுகிறார்கள். அரசிலே இருக்கக்கூடிய பல துறைகள் இன்று போட்டா போட்டி போட்டுக் கொண்டு பணத்தை விளம்பரத்திற்காக ஏராளமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளம்பரத்துறையிலே தான் எவ்வளவு செலவு என்று நீங்கள் கேள்வி கேட்டு இருக்கிறீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்லி இருக்கிறார். பிறகு, நீங்கள் கேள்விக்கு அப்பால் போனால் எப்படி?

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டு இருக்கிற கேள்வியே பத்திரிகை விளம்பரத்திற்கு 1993-ல் தமிழக அரசு எவ்வளவு செலவிட்டுள்ளது என்றுதான் கேட்டு இருக்கிறேன். நான் இந்த பர்டிகுலர் துறையைச் சொல்லவில்லை. தமிழக அரசிலே இருக்கக்கூடிய அனைத்துத் துறைகளைத் தான் சொல்கிறேன்.

முற்பகல் 10.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படியானால் நீங்கள் பொது விவாதத்தில் கலந்து கொண்டு பேசி மொத்தமாகப் பதில் பெறுங்கள். இதில் இந்தத் துறையிலே இருந்துதான் பெறமுடியும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தனை லட்சங்களை அரசு செலவு செய்கிறபோது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள், இந்தத் திட்டங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகச் செலவிடுவதாகச் சொன்னார்கள்.

[1995 ஏப்ரல் 18

திட்டத்தினுடைய பெரும்பகுதியை இன்று விளம்பரமே சாப்பிட்டுக்கொண்டிருப்பது என்பது அதிகமாக இருக்கிறது என்ற காரணத்தினால் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் இதைக் குறைப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். இன்னொன்று, வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு என்பது போல, சில பத்திரிகைகளுக்கு மட்டும் கொடுக்கிறார்கள். எந்தெந்த பத்திரிகைகளுக்கு கொடுத்து இருக்கிறார்கள் என்ற விவரத்தைக் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதான் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தமட்டில் மிகக் குறைந்த அளவிலேதான் விளம்பரத்திற்காகச் செலவிடப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல நிரந்தரமாக இருந்ததில்லை என்றெல்லாம் சொன்னார்கள். நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எந்த நிலை உருவாக்கப்பட்டாலும் என்றைக்கும் நிரந்தரமாக (மேசையைத் தட்டும் ஒலி) பொதியமும் இமயமும் நீடித்து நிலைத்து நிற்பதைப் போல இந்த தமிழ் நாட்டின் நிரந்தர முதலமைச்சராக இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருப்பார்கள் என்பதனை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு கையைக் கழுவினாலும் கைரேகை போகாது.* *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் அது வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. கேள்வி நேரத்தில் அத்தகைய குற்றச்சாட்டு, அரசியல் குற்றச்சாட்டு வேண்டாம் (குறுக்கீடு) அதற்கு இவர் பதில் சொல்லியிருக்கிறார். நிரந்தரம் இல்லை என்று ஏதோ ஒரு பாட்டு பாடினால், அதற்குப் பதில் சொல்வார் அல்லவா !

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே கடந்த காலங்களில் ஒரு அரசாங்கத்தால் எந்த அடிப்படையில் விளம்பரத்திற்காகச் செலவிடப்பட்டதோ அதே அளவிலேதான் இந்த அரசும் விளம்பரத்திற்காக செலவிடுகிறது என்பதனை இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எத்தகைய பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுக்கப்படுகிறது என்ற

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 ஏப்ரல் 18]

கேள்வியினைத் தொடுத்தார்கள். தரம் வாய்ந்த, தகுதி வாய்ந்த பத்திரிகை தர்மத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிற பத்திரிகைகளுக்கு மட்டும்தான் கொடுக்கப்படுகிறது. இட்டுக் கட்டி, கட்டுக்கதைகளை கட்டுகிற ஆள் இல்லாத கட்சிகளை தூக்கி நிறுத்துகின்ற பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதில்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரந்தரமாக நாங்கள் இருப்போம் என்று இங்கே சொன்னார்கள். இவ்வளவு நிரந்தரம் பற்றி உறுதியாக இருக்கிறபோது விளம்பரம் எதற்கு என்ற ஒரு வினாவை நான் இங்கே தொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இங்கே மற்ற அரசைவிட நாங்கள் சிக்கனமாக இருக்கிறோம் என்று சொன்னார்கள். மற்ற அரசுக் காலத்திலே இந்த செய்தி மற்றும் விளம்பரத் துறைக்கு எவ்வளவு செலவிட்டீர்கள்? இப்போது இந்த அரசு பொறுப்பேற்ற பின்னால் எவ்வளவு செலவிட்டிருக்கிறது என்கின்ற குறிப்பினை அவைக்குத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து சில தரமான பத்திரிகைகள் என்றும், அதிலே சில ஆள் இல்லாத கட்சிகளைத் தூக்கி நிறுத்துகிற பத்திரிகை என்றும் சிலவற்றை இங்கே சொன்னார்கள். அவை எவை எவை? எதெதற்குத் தரமான பத்திரிகை என்று வரையறையை நீங்கள் எந்த இலக்கணத்தை வகுத்திருக்கிறீர்கள் என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளம்பரத்தை மட்டும் மையமாகக் கொண்டு இந்த அரசு செயல்படவில்லை. இந்திய துணைக் கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள் இந்த மாநிலத்திலே நிறைவேற்றப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள் எல்லாம் இந்த மாநிலத்திலே நிறைவேற்றப்படுகின்றன என்பது மட்டுமல்ல, இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநில முதலமைச்சரும் செய்யாத அளவுக்கு, மாவட்டங்கள் தோறும் சென்று மக்களைச் சந்தித்து அற்புதமான திட்டங்களை அறிமுகப்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) செயல்படுத்தி வருகின்ற ஒரே முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான். ஆகவே மக்களைச் சந்திக்கின்ற,

[1995 ஏப்ரல் 18

இந்திய துணைக் கண்டத்திலே மக்களை அதிகமாகச் சந்திக்கின்ற முதலமைச்சரும், அற்புதமான திட்டங்களை எல்லாம் மாவட்டந்தோறும் செயல்படுத்துகிற முதலமைச்சர் புரட்சித் தலைவி தான். ஆகவே திட்டங்களையும் செயல்பாடுகளையும் இந்திய துணைக் கண்டத்திற்கே வழிகாட்டுகின்ற வகையில் தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகின்ற காரணத்தினாலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துகொள்கிற நிகழ்ச்சிகளுக்கு மட்டும் செய்தித்துறையின் சார்பிலே விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. அதுமாத்திரமல்ல, திட்டங்களைச் செயல்படுத்துகிறபோது, அந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு விளம்பரம் டெண்டர் நோட்டீஸ் விடப்பட வேண்டியிருக்கிறது. அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து அந்த டெண்டர் நோட்டீஸ் விடுகின்ற காரணத்தினாலே அங்கே விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. அதைப்போல, ஆதிதிராவிட மக்களுக்காக இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டங்கள் இந்த மாநிலத்தில் நிறைவேற்றப்படுவதால் அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிலங்கள் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது. அது குறித்தும் விளம்பரப்படுத்த வேண்டிய அவசியநிலை ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஒரு அரசாங்கத்திற்கு விளம்பரம் முக்கியம். திட்டத்தின் பயனை மக்கள் புரிந்துகொள்கின்ற வகையிலே செயல்படுத்த வேண்டியது ஒரு அரசாங்கத்தின் கடமை. அந்த உணர்விலேதான், அந்த அடிப்படையிலேதான் விளம்பரங்களுக்காக இந்த அரசு செலவிடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விளம்பரத்தைப் பற்றி குறை சொன்னார்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் உறுப்பினர் மீது நேரடி குற்றச்சாட்டு வேண்டாம்.

திரு. சி. ஞானசேகரன்: அமைச்சர் விதியை மீறி பேசிக் கொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நான் நீக்குகிறேன். நீங்கள் பேசும்போது தவறாகப் பேசினால் எப்படி நீக்குகிறேனோ அதுமாதிரி அவையில் உறுப்பினர்மீது கேள்வி நேரத்தில் நேரடிக் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) 3-வது கேள்வி கிடையாது. இரண்டு துணைக் கேள்விகள்தான். (குறுக்கீடு) அமைச்சர் விதியை

****மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.**

1995 ஏப்ரல் 18]

மீறிப் பேசியதாகச் சொல்கிறீர்கள். விதியை மீறி 3-வது கேள்வி நீங்கள் எப்படிக் கேட்க முடியும்? விதிப்படி இரண்டு துணைக் கேள்விகள்தான் கேட்க முடியும். உட்காருங்கள்.

வினா எண் 334, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

334—

பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல்

**27200—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்களுக்கு என்று தனியாக தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் கலைக் கல்லூரி ஒன்றும் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் படித்தவர்கள் அதிகமாக வாழ்கின்ற ஒரு மாவட்டம். குறிப்பாக பெண்கள் கல்வியில் இன்று தமிழகத்தில் முதலிடம் வகித்து வருகிறது. ஆனால், இங்கு அரசால் இதுவரை ஒரு கல்லூரியும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்களுக்கு என்று தனியாக தொழில் நுட்பக் கல்லூரி அமைத்துத் தர மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 தொழில் நுட்பப் பயிலகங்கள் இருக்கின்றன. இந்த ஆறும் அங்கே இருக்கின்ற மாணவ மாணவிகளுக்கு பயன்படுகின்ற வகையிலே இருக்கின்றன என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். ஆகவே, அரசின் சார்பில் அங்கே பல்தொழில் பயிலகம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY